DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 46/2025 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | Pw-3- மாதையன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 07.07.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.01.2025-ம் தேதியன்று மாலை சுமார் 07.00 மணியளவில் நிலைய உதவி ஆய்வாளர் வில்சன் சகாயராஜ் என்பவருடன், நானும் காவலர் நாகராஜ் என்பவரும் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது அத்தாணி கைகாட்டி அருகில் சுமார் 07.30 மணியளவில் அத்தானியிலிருந்து வந்த ஒரு இருசக்கர வாகனத்தை தடுத்து நிறுத்தினோம். அந்த வாகனத்தை ஆஜர் 1ம் எதிரி குப்புசாமி ஓட்டி வந்தார். ஆஜர் 2ம் எதிரி குமார் வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்தார். அவர்களை பிடித்து விசாரித்தபோது குடிபோதையில் இருப்பது தெரியவந்து. உதவி ஆய்வாளர் அவர்களிடம் கேட்டபோது அவர்கள் இருவரும் குடிபோதையில் இருப்பதை ஒப்புக்கொண்டார்கள். பின்னர் எங்களிடமிருந்த குடிபோதை பகுப்பாய்வு கருவி மூலம் அவர்களை சோதனை செய்தபோது அவர்கள் இருவரும் குடிபோதையில் இருப்பது உறுதியானது. அதனால் அவர்கள் இருவரும் மீதும் குடிபோதையில் வாகனத்தை ஓட்டி வந்ததற்கான வழக்கை பதிவு செய்வதாக உதவியாளர் கூறினார். அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டார்கள்.

பிறகு உதவி ஆய்வாளர் வாகனத்தின் பாதுகாப்பு கருதி வாகனத்தை காவலர் நாகராஜ் என்பவர் என்பவரிடம் நிலையத்தில் ஒப்படைக்குமாறு கூறினார். நாகராஜ் வாகனத்தை எடுக்க சென்றபோது எதிரி குப்புசாமி தாங்கள் இங்கேயே அபராத தொகையை செலுத்தி விடுவதாகவும், வாகனத்தை தற்போது தங்களுக்கு வேண்டும் எனவும் கூறினார்கள். அதற்கு உதவி ஆய்வாளர் அபராதத்தை இங்கு செலுத்த முடியாது என்றும் நீதிமன்றத்தில் தான் அபராதத்தை செலுத்த முடியும் என்றும் நீதிமன்றத்தில் அபராதத்தை செலுத்தி விட்டு வாகனத்தை பெற்றுக் கொள்ளுமாறும் கூறினார். அப்போது நாகராஜன் வாகனத்தை எடுக்க விடாமல் எதிரி குப்புசாமி தடுத்து தகாத வார்த்தைகளால் திட்டி நாகராஜ் அணிந்திருந்த காவல்துறை சீருடை பிடித்து இழுத்து கிழித்து அவரது வலது கையால் நாகராஜின் கன்னத்தில் குத்தினார்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.07 18:12:20 +0530

பின்னர் 2ம் எதிரி குமார், நாகராஜன் முதுகில் அடித்தார். அப்போது நானும், உதவி ஆய்வாளரும் அருகிலிருந்தவர்களும் தடுக்க சென்றபோது எதிரிகள் இருவரும் எங்கள் அனைவரையும் தகாத வார்த்தைகளால் திட்டி அங்கு இருந்த கற்ககளை காட்டி எங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்து விட்டு கற்களை அங்கேயே போட்டுவிட்டு சென்று விட்டார்கள். பின்னர் உதவி ஆய்வாளருடன், நான் மற்றும் காவலர் நாகராஜ், கைப்பற்றிய வாகனம் ஆகியவற்றுடன் நிலையம் வந்தோம். நிலையம் வந்து உதவியாளர் நாகராஜிடமிருந்து அவர் அணிந்திருந்த கிழிந்துபோன சீருடை, இருசக்கர வாகனத்தையும், படிவம் 91 மூலம் கைப்பற்றினார். வழக்கு தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.07 18:12:32 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 46/2025 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | Pw-4- முத்துராஜ் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 07.07.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கருவல்வாடிபுதூரில் குடியிருந்து கொண்டு, பேக்கரியில் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை, 2025 ஆம் வருடம் தைப்பொங்கல் அன்று இரவு சுமார் 09.30 மணியளவில் நான் கடைக்கு தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு அத்தானி கைகாட்டி வழியாக வந்து கொண்டிருந்தேன். அப்போது அன்றைய தினம் இரவு சுமார் 07:30 மணியளவில் அந்த இடத்தில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது அவ்வழியாக வந்த குடிபோதையில் இருந்த இரண்டு நபர்களுக்கும் போலீசாருக்கும் இடையே தகராறு ஏற்பட்டதாகவும், அது தொடர்பாக போலீசார் அங்கு வந்து விசாரித்து படம் வரைந்து கொண்டிருப்பதாகவும் கூறினார்கள். அப்போது என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள் . நான் பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் செய்தேன்.

தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் போலீசார் அந்த இடத்திலிருந்து 2 கருங்கட்களை கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகசரிலும் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகசர் ஆ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.07 18:12:51 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 46/2025 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | Pw–5– வெங்கிடுசாமி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 07.07.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் அத்தானியில் குடியிருந்து கொண்டு, Transport தொழில் செய்து வருகிறேன். தேதி. மாதம் நினைவில்லை, 2025 ஆம் வருடம் தை 1ம் தேதியன்று இரவு சுமார் 09:30 மணியளவில் நான் அத்தாணி கைகாட்டி வழியாக வந்து கொண்டிருந்தபோது அன்றைய தினம் மாலை சுமார் 07.30 மணியளவில் அங்கு போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, குடிபோதையில் வந்த இரண்டு நபர்களுக்கும், போலீசார்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டதாகவும், அது தொடர்பாக போலீசார் அப்போது அங்கு விசாரணை செய்து கொண்டிருப்பதாகவும் கூறினார்கள். போலீசார் சம்பவயிடத்தில் விசாரணை செய்து வரைபடம் வரைந்து கொண்டு இருந்தார்கள். பார்வை மகஜரில் என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் போலீசார் சம்பவயிடத்திலிருந்து எங்கள் முன்னிலையில் 2 கற்களை கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகசரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள் .

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.07 18:13:06 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 46/2025 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | Pw–1– வில்சன் சகாயராஜ் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 07.07.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வாகன விபத்தை தடுக்கும் பொருட்டு வாகன தணிக்கை செய்ய உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி கடந்த 14.0.2025–ம் தேதியன்று மாலை சுமார் 07.00 மணி முதல் அத்தாணி கைகாட்டி பிரிவில் முதல் நிலை காவலர் மாதையன் மற்றும் காவலர் நாகராஜன் ஆகியோருடன் நான் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தேன். அப்போது சுமார் இரவு 07:30 மணியளவில் அந்த வழியாக ஒரு நபர் TN 36 AY 4394 என்ற பதிவெண்கொண்ட Heron Honda Shine பைக்கை தாறுமாறாக ஓட்டி வந்தார். அவரை நிறுத்தி விசாரித்தபோது அவர் குடிபோதையில் இருந்தார். குடிபோதை பகுப்பாய்வு கருவி மூலம் அவரை சோதனை செய்தபோது அவர் குடிபோதையில் இருந்தது உறுதியானதால் அவர் மீது குடிபோதையில் வாகனத்தை ஓட்டி வந்ததற்காக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அப்போது நான் வாகனத்தின் பாதுகாப்பு கருதி என்னுடன் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த காவலர் நாகராஜன் என்பவரிடம் வாகனத்தை நிலையத்தில் ஒப்படைக்குமாறு கூறினேன். அப்போது நாகராஜன் மேற்படி வாகனத்தை நிலையத்தில் ஒப்படைப்பதற்காக வாகனத்தை எடுத்தார். .அப்போது ஆஜர் எதிரி குப்புசாமி காவலர் நாகராஜ் பார்த்து எங்கள் ஊரிலேயே வந்து என் மீதே கேஸ் போடுகிறாயா என்று கூறி தகாத வார்த்தைகளால் திட்டிவாகனத்தை எடுக்க விடாமல் தடுத்தார். அப்போது எதிரி குப்புசாமி மேற்படி வழக்கிற்காக இங்கேயே தான் அபராதம் செலுத்துவதாக கூறினார். ஆனால் நான் இங்கு அபராதம் செலுத்த முடியாது என்றும் நீதிமன்றத்தில் தான் அபராதம் செலுத்த முடியும் என்றும் கூறினேன். அப்போது எதிரி குப்புசாமி எங்களை தகாத கெட்ட வார்த்தைகளால் பேசி காவலர் நாகராஜன் அவர் அணிந்திருந்த காவல் சீருடை சட்டையை பிடித்து இழுத்து கிழித்து பின்னர் தன் வலது முழங்கையால் காவலர் நாகராஜன் கன்னத்தில் ஓங்கி குத்தினார்.

அப்போது காவலர் நாகராஜன் தடுமாறி கீழே விழும்பொழுது 2ம் ஆஜர்எதிரி குமார், நாகராஜன் முதுகில் குத்தினார். நானும் என்னுடன் வந்த முதல் நிலைக் காவலர்

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.07 18:13:20 +0530

மாதையன் என்பவரும் மற்றும் அங்கிருந்தவர்களும் எதிரிகளை விலக்காட்ட சென்றபோது எதிரிகள் இருவரும் எங்கள் அனைவரையும் தகாத வார்த்தைகளால் பேசி அங்கிருந்து கல்லை காட்டி எங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்து விட்டு அந்த கல்லை அங்கேயே போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள்.

பின்னர் நாங்கள் நிலையம் வந்து மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் அளித்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரி ஓட்டி வந்த வாகனத்தையும், எதிரி கிழித்த சாட்சி நாகராஜ் அணிந்து இருந்த காவல்துறை சீருடை சட்டையையும் படிவம் 91 மூலம் நான் கைப்பற்றினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் படிவம் 91 ல் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். படிவம் 91 ல் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தற்போது நீதிமன்றத்தில் உள்ள காவல்துறை சீருடை தான் நான் அன்று காவலர் நாகராஜிடம் இருந்து கைப்பற்றினேன். அந்த சீருடை அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ள இரண்டு நபர்கள் தான் அன்று எங்களிடம் தகராறு செய்தவர்கள். வழக்கு தொடர்பாக புலன்விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.07 18:13:44 +0530

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 46/2025 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | Pw-2- நாகராஜ் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 07.07.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன் கடந்த 14.01.2025 ஆம் தேதியன்று இரவு சுமார் 7 மணி அளவில்நானும் காவலர் மாதையன் என்பவரும் நிலைய உதவியாளர் வில்சன் சகாயராஜ் என்பவர் உடன் அத்தாணி கைகாட்டி அருகில் வாகன தணிக்கையில் ஈடுபட்டு இருந்தோம். அப்போது சுமார் 07.30 மணியளவில் அத்தானியிலிருந்து அந்தியூர் நோக்கி ஆஜர் எதிரிகள் இருவரும் TN 36 AY 4394 என்ற பதிவெண் கொண்ட Honda Shine பைக்கை ஆஜர்1ம் எதிரி குப்புசாமி ஓட்ட, ஆஜர்2 ம் எதிரி குமார் பின்னால் அமர்ந்து கொண்டு தாறுமாறாக மேற்படி பைக்கை ஓட்டி வந்தார்கள். அப்போது எங்களுடன் இருந்த உதவி ஆய்வாளர் அவர்களின் வண்டியை நிறுத்தி சோதனை செய்தபோது அவர்களிடம் குடிபோதையில் இருக்கிறீர்களா என்று கேட்டார். அப்போது இருவரும் தாங்கள் குடிபோதையில் உள்ள குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள்.

அப்போது எங்களிடம் இருந்த குடிபோதை பகுப்பாய்வு கருவி மூலம் அவர்கள் இருவரையும் சோதனை செய்தபோது அவர்கள் இருவரும் குடிபோதையில் இருப்பது உறுதியானது. அதனால் உதவிய ஆய்வாளர் அவர்கள் இருவரிடமும் நீங்கள் குடிபோதையில் வாகனத்தை ஓட்டி வந்ததற்காக உங்கள் மீது வழக்கு பதிவு செய்து செய்கிறேன் என்று கூறினார். அதற்கு எதிரிகள் இருவரும் தங்களுக்கு இப்போதே வண்டி வேண்டும் என்றும் நாங்கள் இப்போது அபராதம் செலுத்தி விடுகிறோம் என்றும் வண்டியை தருமாறும் கேட்டார்கள். அதற்கு உதவி ஆய்வாளர் இங்கு அபராதம் செலுத்த முடியாது என்றும் நீதிமன்றத்தில் தான் அபராதம் செலுத்த முடியும் என்றும் அபராதம் செலுத்தி விட்டு அந்த இரசீதை கொண்டு வந்து காண்பித்து வண்டியை எடுத்துக் கொள்ளுமாறும் கூறினார். உதவி ஆய்வாளர் என்னிடம் வண்டியை பாதுகாப்பு கருதி காவல் நிலையத்திற்கு எடுத்துச் செல்லுமாறு கூறினார்.

நான் வண்டியை எடுக்க சென்றபோது எதிரி குப்புசாமி என்னை வண்டியை எடுக்க விடாமல் தடுத்து எங்கள் ஊருக்கு வந்து என் மீதே கேஸ் போடுகிறீர்களா என்று என்னை தகாத வார்த்தைகளால் திட்டி, நான் அணிந்திருந்த காவல்துறை சீருடை சட்டையை கிழித்து அவரது வலது முழங்கையால் எனது கன்னத்தில் குத்தினார்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.07 18:14:00 +0530

அப்போது 2ம் எதிரி குமார் தகாத வார்த்தைகளால் பேசி என்னை முதுகில் குத்தினார். அப்போது முதல் நிலை காவலர் மாதையன், உதவி ஆய்வாளரும் மற்றும் அங்கிருந்தவர்களும் எதிரிகளை தடுக்க முற்பட்டபோது எதிரிகள் இருவரும் அங்கிருந்து இரண்டு கருங்கற்களை எடுத்துக்காட்டி தகாத வார்த்தைகளால் எங்களை திட்டி கொலை மிரட்டல் விடுத்து விட்டு அங்கிருந்து சென்று விட்டார்கள்.

பின்னர் நான், முதல் நிலை காவலர் மாதையன் மற்றும் உதவி ஆய்வாளருடன் கைப்பற்றிய இருசக்கர வாகனத்தையும் எடுத்துக்கொண்டுநிலையம் வந்தோம். உதவி ஆய்வாளர் படிவம் 91 மூலம் எனது கிழிந்த சீருடையையும் மற்றும் மேற்படி பைக்கையும் கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் படிவம் 91 ல் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். படிவம் 91 ல் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் உள்ள 2 கற்ககளை காட்டித் தான் எதிரிகள் இருவரும் எங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள். அந்த கற்கள் அ.சா.பொ.2 அக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.07 18:14:12 +0530

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.